10th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உத்தியோகத்தில் இல்லாதவர்கள் முழு நேரக் கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டும். அதற்காகத் தான் அப்படி முழு நேரக் கல்லூரி வைத்திருக்கிறோம். இல்லையென்றால் அதை எடுத்து விடலாம். உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு உத்தியோகத்தையும் விட முடியாது, படிக்க வேண்டும் என்ற எண்ணமும் இருக்கிறது என்பதற்காகத் தான் மாலை நேர வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் தான் உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு மட்டும் என்று வைத்திருக்கிறோம்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, மாலை நேரத்தில் படிக்கும் அரசாங்க ஊழியர்கள் சட்டப் படிப்பு முடிகிற வரையில் வேறு இடங்களுக்கு மாற்றப்பட மாட்டார்கள் என்று அரசாங்கம் உறுதி அளிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது வேறு விஷயம். அம்மாதிரி உறுதி பொதுவாக அளிக்க முடியாது.

கலைக் கல்லூரிகள்

* 238 கேள்வி—திரு. வெ. குருஷ்ணமூர்த்தி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அடுத்த கல்வியாண்டில் தமிழகத்தில் புதிய அரசாங்கக் கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், எத்தனை, எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்படுள்ளன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) Six Colleges one each at Thanjavur, Karur, Virudhachalam, Tiruvannamalai, Dindigul and Tiruppur are proposed to be started during 1966–67.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்படும் கலைக் கல்லூரிக்கு முதல் தவணையாக எவ்வளவு பணம் கட்டவேண்டும்? வட சென்னையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற கல்லூரிக்கு ஏதாவது கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முதல் தவணை மட்டுமல்ல. புதிதாகக் கல்லூரி ஆரம்பிக்க 5 லட்சம் ரூபாய் கட்டி விடவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். நான் முன்பே கூறியது போல வட சென்னை கல்லூரிக்கு இது வரையில் ஒன்றும் கொடுக்கவில்லை. 5 லட்சம் ரூபாய் வசூலித்துக் கொடுப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள் சிலர். கிடைக்கும் என்றே நம்புகிறேன், எதிர்பார்க்கிறேன்.

திரு. மா. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிற கல்லூரி தஞ்சையிலேயே ஆரம்பிக்கப்படுமா ? அல்லது வேறு இடத்தில் ஆரம்பிக்கப்படுமா ? அது பெண்கள் கல்லூரியாக இருக்குமா ? அல்லது இருவரும் சேர்ந்து படிக்கும் கல்லூரியாக இருக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் குறிப்பிடும் கல்லூரி தஞ்சையிலே மகளிர்க்கான கல்லூரி.

திரு. நா. துரைப்பாண்டியன் : தலைவர் அவர்களே, தாராபுரம் தொகுதியில் கல்லிக்குளத்தில் புதிதாக ஒரு கல்லூரிக்கு அஸ்திவாரம் போட்டிருக்கிறார்கள். அதற்கு அனுமதி கொடுக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் குறிப்பிட்டது அரசாங்கம் அமைக்கிற கல்லூரிகளைப் பற்றியது. திருநெல்வேலி ஜில்லாவில் அரசாங்கம் எதுவும் அமைப்பதாக இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட லிஸ்டில் என்னுடைய மாவட்டமும் இருக்கும் என்று எதிர்பார்த்தேன், ஆனால் ஏமாற்றம் அடைந்து விட்டேன். சர்க்கார் துறையிலே ஆரம்பிக்கவில்லை என்றாலும் செயின்ட் ஜோசப் பெண்கள் கல்லூரி என்று ஆரம்பிக்க முன் வந்திருக்கிறார்களே, அதைப் பரிசீலிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது அளித்த விடை அரசாங்கமே ஆரம்பித்து நடத்தும் கல்லூரி பற்றியது. கனம் உறுப்பினர் ஏமாற்றம் அடைந்ததாகச் சொன்னார்கள். உதகையிலே சர்க்கார் ஒரு கல்லூரியை அமைத்தது. முதலிலேயே சர்க்கார் அமைத்த கல்லூரிக்கு நீலகிரி மக்கள் உடனடியாக நிதி அளிப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் அளிக்கவில்லை என்பது எனக்கும் பெருத்த ஏமாற்றம். தனிப்பட்டவர்கள் கல்லூரி வேறு விஷயம். அதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லுகிறேன்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருப்பனந்தாள் பண்டாரசந்நதி அவர்களின் உதவி கொண்டு ஆடுதுறையில் கல்லூரி ஏற்படுத்த அரசாங்கத்திடம் கோரிக்கை வந்ததே, அது எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

*** 239 கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூரில் உள்ள அரசாங்கக் கலைக் கல்லூரிக்கென புதிய கட்டடம் கட்டுவதற்கு எஸ்டிமேட் தயாரித்து டெண்டர் விடப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?